

# நித்திய ஜீவன்

'பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்', ரோமர் 6:23.

தேவனின் மாறாத அன்புதான் அவருடைய கிருபை. தேவனின் ஒரே பேரான குமாரனே இயேசு கிறிஸ்து.

அன்பானவர்களே,

இந்தப்பூமியில் மனுஷர் நடத்தும் வாழ்க்கை பாவமானது என்று பரிசுத்த வேதம் சொல்கின்றது.

**இந்த மனுஷரை தோற்றுவித்தவர் யார்?**

தேவன் மனுஷரை தமது சாயலிலும், ரூபத்திலும் படைத்திருந்தார். அதாவது, நித்திய ஜீவனிலே உருவாக்கியிருந்தார். ஆயினும், முதல் மனுஷனின் சரீர அமைப்பு, ஒரு கட்டளையினால் தொடர்ந்து ஆவிக்குரிய வாழ்க்கை உடையதாகவும், அந்தக்கட்டளையை மீறும்போது சரீர வாழ்க்கைக்கு உள்ளாகும்படியாகவும் அமைத்திருந்தார். தேவன் தராத ஒன்று, அவருடைய விருப்பத்திற்கு மாறானது. தேவன் எதற்காக நம் வாழ்க்கையை கண்காணிக்க விரும்புகின்றார். மனுஷர் தேவனின் பிள்ளைகள்; அவரது புனிதப்பயணத்தில், அவருடன் சேர்ந்து பணியாற்றும்படியாக உருவான, தேவப்புத்திரர்கள். அவர்கள் தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும், அதுதான் தேவ சித்தம். அப்படி கீழ்ப்படியாத ஆத்துமா (ஜீவன்), தேவனுக்கு சத்துருவாக மாறுகின்றது அதாவது சாத்தான் என்றழைக்கப்படுகின்றது.

தேவப்பிள்ளைகளாக உருவான முதல் மனுஷனும், மனுஷியும், தேவ லோகத்திலே, சாத்தானாகிப்போன ஒருவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து பாவமான சரீர வாழ்க்கையை தெரிந்து கொண்டார்கள். அதன்பிறகு மனுஷருக்குப்பிள்ளைகள் பிறந்த போது, தேசங்களும், பல மொழிகளும் தோன்றின.

**தேவன் சாத்தானை தோற்றுவித்தவரா?**

தேவன் தமது பரமண்டலங்களில் (Galaxies), சாத்தானை உருவாக்கவில்லை; லூசிபர் (விடிவெள்ளியின் மகன்) என்ற தேவதூதனைத்தான் உருவாக்கினார் என்று வேதம் நமக்கு போதிக்கின்றது (ஏசாயா 14;12). ஆனால், இந்த தூதன் தனக்கென்று சொந்த ஆசைகளை உருவாக்கத் தொடங்கியதும், அவனது நினைவுகள், சத்தியத்திற்கு புறம்பாக மாறிப்-

போனது. அதனால், அவன் தேவனுக்குச் சத்துருவானான். அதாவது, தனது ஆவிக்குரிய வாழ்க்கையில், தேவனோடு சமாதானமின்றி, சாத்தானாகிப்போனான். சாத்தான் என்பது, சமாதானமில்லாத ஒரு வாழ்க்கையை குறிக்கின்றது. தேவ சித்தத்தை நிறைவேற்றாத எந்த ஒரு ஆத்துமாவும், தேவனுக்குச் சத்துருவாக மாறுகின்றது.

இந்த மாபெரும் உண்மையை, தேவன் ஆதாம், ஏவாள் என்ற இரண்டு சரீரப்பிள்ளைகளின் மூலமாக வெளிப்படுத்தினார், பூமியிலே. ஆதாமும், ஏவாளும் தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து, அவரது சொல் கேட்டு நடந்த காலங்களிலே, நித்திய ஜீவனை சரீரத்தில் உடையவராக வாழ்ந்தனர். ஆனால் தேவ சித்தத்தை மீறின உடனே, கீழ்ப்படியாமையின் பிள்ளைகளாய் மாறிப்போனார்கள். சத்துருவாகிப்போன சாத்தான், ஏவாளிடம் சொன்ன முதல் பொய்: 'நீங்கள் சாகவே சாவதில்லை', என்றுதான். அதுமாத்திரமன்று, மனுஷர் தேவதூதரைப்போல வாழ்வதற்கு, தேவ ஆவியானவர் தேவையில்லை, இந்த விலக்கப்பட்ட கனியை புசித்தால் போதும்; உங்கள் கண்கள் திறக்கப்படும்; நீங்கள் (மனுஷர்) நன்மை தீமை அறிந்து வாழும் வாழ்க்கையே, பரலோகத்தில் தேவன் எங்களுக்கு (தேவ தூதர் களுக்கு) அளித்திருக்கும் வாழ்க்கை என்றும் பொய் சொன்னான் (ஆதியாகமம்3:5). இந்தப் பொய்யை நம்பி ஏமாந்தவள்தான் முதல் மனுஷி. தேவனின் வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், சாத்தானின் மாய வார்த்தைகளுக்கு தம்மை ஒப்புக்கொடுத்த, மனுஷர், பாவத்திற்கு பலியானார்கள். கீழ்ப்படியாமையே பாவம், அதுவே நமக்கு சரீர மரணத்தை கொண்டு வந்தது; அதாவது சட்ட மீறுதல், நம்மைத் தண்டனைக்கு உள்ளாக்கியிறுக்கின்றது.

### நித்திய ஜீவன் என்றால் என்ன?

தேவன் ஆவியாயிருக்கின்றார்; அந்த பரிசுத்த ஆவியானவரே, நித்திய காலமாக வாழும் ஜீவனையுடையவர். பிதா தம்மில்தாமே நித்திய ஜீவனையுடையவராய் இருப்பதுப் போல, குமாரனும் (இயேசுவும்) நித்தியஜீவனையுடையவராய் இருக்கும்படி அருள் செய்திருக்-கின்றார்.

### எதற்காக?

மனுஷர், தேவ வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போனதினிமித்தம், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை, அதாவது சமாதானமான ஒரு வாழ்க்கையை இழந்து போனார்கள். தேவ ஆவியானவர் நம் உள்ளத்தில் வசிக்கும், தேவனின் சாயலும், ரூபமுமானவர். மனுஷரின் ஆவி, தேவன் தந்த தீபமாக இருக்கின்றது (நீதிமொழிகள் 20:27). ஆனால், மனுஷரின் ஆவி, நன்மை தீமை அறிந்து கொண்டதும், தேவ சித்தத்தை நிறைவேற்றாமல், சுயமான ஆசைகளை உற்பத்தி செய்ய ஆரம்பிக்கின்றது. இந்த ஆசைகளை நிறைவேற்ற தனது ஆயுட்காலத்தை செலவிடத் தொடங்குகின்றது. இப்படி, வாழும் ஆத்துமா, அதாவது மனுஷ ஆவி, பாவமான சிந்தனை வாழ்வையே தோற்றுவிப்பதாக உள்ளது.

### இந்த ஆத்துமா, எப்படி மறுபடியும் பரிசுத்தமடையமுடியும்?

ஆதாம், மற்றும் ஏவாள், பாவம் செய்தவுடன், அவர்களது பிள்ளைகள் யாவரும் பாவத்தின் உருவமானார்கள்; ஏன்? நமது சரீரம் உருவாவதே, பாவ உணர்வினால்தான் என்று ஒரு பக்தன் (சங்கீதக்காரன்) கூறுகின்றார்.

'இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப்பாவத்தில் கர்ப்பந்-தரித்தாள்', சங்கீதம் 51:5.

அப்படியென்றால், ஒவ்வொரு குழந்தையும் தனது சரீரத்தை பெற்றோரிடமிருந்து, பாவத்தின்மூலம்தான் பெற்றுக்கொள்கிறது. இந்த சரீரத்தில்தான் தேவன், மனுஷ ஆவியை தந்தருளுகின்றார் (ஏசாயா 57:16; பிரசங்கி 11:5). நம்முடைய கர்த்தராகிய இயேசு-கிறிஸ்துவின் சரீரம்மாத்திரமே, பரிசுத்த ஆவியானவரால் உண்டாக்கப்பட்டது.

தேவதூதன் மரியாளுக்கு பிரதியுத்தரமாக (லூக்கா 1:35) கூறியது:

'பரிசுத்த ஆவி உன் மேல் நிழலிடும்; ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்'.

அன்பானவர்களே!

மனுஷரின் கீழ்ப்படியாமை, மிகப்பெரிய ஆபத்தை அவர்களுக்கு கொண்டுவந்தது, ஏதேன் தோட்டத்தில் (தேவன் அமைத்த முதல் வீடு). அது பரிசுத்த ஆவியானவர் அவர்களை-விட்டு எடுத்துக்கொள்ளப்பட்டது. பாருங்கள், அதனால்தான் பரிசுத்த ஆவியினாரால் உருவான கிறிஸ்து இயேசுவும்கூட, பாவ மன்னிப்புக்கேற்ற ஞானஸ்தானம் பெற்று கரை-யேறினவுடன்தான், பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டார் (மத்தேயு 3:16). பேதுரு முதல் எல்லா சீஷர்களும், பெந்தகோஸ்தே தினத்தன்று பரிசுத்த ஆவியை பெற்றுக்-கொண்டார்கள் (அப்போஸ்தலர் 2:4). இந்த பரிசுத்த ஆவியை, மறுபடியும் மனுஷ குமாரன் பெற்றுக்கொள்ள, தேவன் எடுத்த தீர்மாணம் யோர்தானில், இயேசுவானவரில் நிறைவேறியது. இதன்மூலம், தேவன் மனுஷருக்குள் வந்து வாசம் செய்ய நீதியாய் வழியை ஏற்படுத்தினார்.

**இப்பொழுது, பாவமான மனுஷர்கள் எப்படி பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்வது; அதாவது தேவன் நம் உள்ளத்திலே எப்படி வருவது?**

பிதாவாகிய தேவன், யோவேல் (2:27, 28) என்ற தீர்க்கதரிசியின்மூலம் இதைக்குறித்து முன்னறிவித்தார்:

'அதற்குப்பின்பு நான் (கர்த்தர்) மாம்சமான யாவர் (மனுஷர்) மேலும் என் ஆவியை ஊற்றுவேன்'.

மனுஷராகிய நாமெல்லாரும், இயேசுவே தேவனுடைய குமாரனும், அவருடைய சாயலும், ரூபமுமென்று விசுவாசிக்கும் பொழுது இரட்சிக்கப்படுவோம் என்று வேதம் சொல்கின்றது. இரட்சிப்பு என்பது நித்திய அழிவிலிருந்து ஆத்துமாவிற்கு, தேவன் அளிக்கும் பாதுகாப்பு. இது இரண்டு கட்டமாக தேவனால் நிறைவேற்றப்படுகின்றது.

1. பாவமன்னிப்பும் அதற்கான ஞானஸ்தானமும்

(இது மனுஷரின் கீழ்ப்படிதலைக்காட்டும் நிகழ்வு)

2. பரிசுத்தமாகுதலும் அதற்கான பரிசுத்த ஆவியின் அபிஷேகமும்

(இது தேவன் மறுபடியும் மனுஷரை தமது பிள்ளையாக ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு)

நம் கர்த்தராகிய இயேசுவானவர் இதைக்குறித்து என்ன சொல்கின்றார் (யோவான் 3:5):

'ஒருவன் ஜலத்தினாலும் (ஞானஸ்தானம்), ஆவியானாலும் (பரிசுத்த ஆவியின் அபிஷேகம்) பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்'.

மேற்க்கூறிய நிகழ்வுகள் ஒருவருடைய பூலோக வாழ்க்கையிலே நடந்தேற, தேவ வசனத்தின்மேல் விசுவாசம் தேவைப்படுகின்றது. மனுஷராகிய நாம் தேவ வார்த்தைகளை கேட்டு விசுவாசிக்கும் பொழுது, தேவன் நம்மை தேடி வருகின்றார். நாம், அவரது வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்தானம் எடுக்கும்போது, நம்

பாவங்களை மன்னிக்கின்றார்; அதற்காக தமது குமாரன், கல்வாரி சிலுவையில் சிந்திய இரத்தத்தை நினைவு கூறுகின்றார்.

'இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்'.

நம்மில் பாவம் இல்லை என்போமாகில், நம்மை நாமே வஞ்சித்துகொள்கிறோம் என்று வேதம் நமக்குத் தெளிவுப்படுத்துகின்றது. அப்படிப்பட்டவர்கள் நித்திய ஜீவனைஅடையவே முடியாது. பாவமன்னிப்பை பெற்றுக்கொள்கிறவர்களைக்குறித்து வேதம் சொல்லும் உண்மை:

'இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்குப் பிள்ளைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன் (ரோமர் 6:22).

பாவம் என்பது நாம் சத்துருவுக்கு அடிமையாக ஜீவிக்கும் இந்த உலக வாழ்க்கையை குறிக்கின்றது.

### இங்கிருந்து எப்படி நாம் தேவன் வாழும் பரலோகத்திற்கு செல்ல முடியும்?

கிறிஸ்துவின் இரத்தத்தால் நாம் பாவமறக் கழுவப்பட்டு, பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்பட்டால் தவிர, நாம் நித்திய வாழ்வை அடையவே முடியாது. நமக்குப் பிடிக்கிறதோ, இல்லையோ, ஒரு இடம் (வாசஸ்தலம்) நம் ஆத்துமாவிற்காக காத்திருக்கின்றது.

ஆத்துமா நித்திய காலமாக வாழப்போகும் உலகங்கள் இரண்டு:

- ➢ நித்திய நரகம் (இருளின் வாழ்க்கை) - வருத்தம் நிறைந்த வாழ்க்கை
- ✓ நித்திய மோட்சம் (ஒளியின் வாழ்க்கை) - சமாதான வாழ்க்கை

தேவன் ஒன்றும் பொழுது போகாமல் மனுஷரை படைக்கவில்லை; அதனால் நாம் பொழுதை வீணாக கழிப்பதற்கு. தேவன் மனுஷரை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும், பெண்ணுமாக உருவாக்கினார் (ஆதியாகமம் 5:1, 2). தேவ ஊழியர்களாக பணிசெய்யும்படி, பூமியைத் தந்தார். அந்தோ! மனுஷர், தேவ திட்டத்தை உணராமல், பாவத்தில் விழுந்தனர். பாவத்தினால் நற்குணங்களை இழந்த மனுஷரின் ஆவி, எப்பொழுது தேவ சாயலை பெறமுடியும், தேவ ஆவியை பெற்றுக்கொள்ளும்போதுதான் என்று வேதம் நமக்கு கற்றுத்தருகின்றது.

மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார் (ரோமர் 8:14-16).

### மறுபடியும் பிறக்கும் அநுபவம் என்ன?

தாயின் வயிற்றில், பாவத்தில் கர்ப்பந்தரித்த ஒரு குழந்தை, இந்த உலகத்திலே வளரும்போது, நன்மை-தீமையை கற்று, ஒரு பாவ வாழ்க்கையை தொடங்குகிறது. தான் ஒரு பாவியென்று உணராமல் வாழும் காலத்தில், தேவனது வார்த்தையை கேட்டு, மனந்திருந்தினால், ஜீவ பாதையை தெரிந்து கொள்கின்றது. இங்கேயும் சாத்தான், மனுஷரை மதம் என்ற மாயையினால் ஏமாற்றி வைத்திருக்கின்றான். இயேசுவை தேவனுடைய குமாரன் என்று நம்புவதே, விசுவாசம். இந்த நம்பிக்கை எப்படி கிறிஸ்துவ

மதமாகமுடியும். கிறிஸ்தவன், பரிசுத்த ஆவியை உடையவன். ஞானம், அறிவு, பரிசுத்தம், நீதி, உண்மை, சத்தியம், இவைகளுக்கு சொந்தக்காரரான, தேவ ஆவியானவர், தமது மாறாத அன்பினால் நம்மை, தம்மைப்போல் மாற்றும்படியாக நம் உள்ளத்தில் பிரவேசிக்கும் உன்னத நிகழ்ச்சியே, மறுபடியும் பிறக்கும் அநுபவம். அற்புதர் இயேசு, தம்முடைய அற்புதமாக நம்மை உயிர்ப்பிக்கும் தினம்.

பரிசுத்த ஆவியை நமக்களிக்கும்படியாக, தேவன் தம்மைதாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து (மாம்சத்தில்), இந்த உலகத்திலே, இயேசுவாக தோன்றினார். இதில் மதசம்பந்தமான நம்பிக்கை தேவையில்லை. தேவ வசனத்தை கேட்டு, விசுவாசமுள்ளவர்களாய், ஞானஸ்தானமெடுத்தவர்கள், யாவரும் தேவப்பிள்ளை-களாகும்படி, இயேசுவின் நாமத்தில் அதிகாரம் பெற்றுள்ளார்கள். இயேசுவின் இரத்தமே பாவ மன்னிப்பை, மாம்சத்தில் வாழும் நமக்களிக்கின்றது. அதை விசுவாசிப்பவர்களே, தண்ணீரில் முழுகி ஞானஸ்தானம் பெறுகிறார்கள்; அதாவது தேவ ஞானத்தை பெற்றுக்கொள்ள தகுதியைப்பெறுகிறார்கள்.

தேவன் தமது பரமண்டலங்களில் வாழும்படியாக நம்மை அழைத்திருக்கின்றார். அந்த சமாதான வாழ்க்கையின் வழியாகும்படியாக, இயேசு கிறிஸ்து, தமது ஜீவனை, நம்முடைய கிருபாதார (சமாதான) பலியாக கல்வாரி சிலுவையில் தந்திருக்கின்றார். அந்த ஒன்றான மெய்த்தேவனை நாம் விசுவாசிக்கும்படியாக, மூன்றாம் நாள் கிறிஸ்துவை உயிரோடு எழுப்பிய, பிதாவாகிய தேவன், நம்மை மனம் திருந்தும்படி இப்பொழுதும் அழைத்துக்-கொண்டு இருக்கின்றார்.

முடிவு நமது தீர்மாணத்திலே உள்ளது.

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது (I கொரிந்தியர் 6:19).

இந்த உண்மையை, விசுவாசிப்பவர்கள், கிறிஸ்துவுக்கு பிள்ளைகளாகிறார்கள். இயேசுவை நேசிக்காமல், அவர் வசனத்தை எப்படி விசுவாசிக்க முடியும்; விசுவாசிக்காமல், எப்படி பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ள முடியும்; தேவ ஆவியைப் பெற்றுக்கொள்ளாமல், எப்படி தேவனுக்குப் பிள்ளைகளாக முடியும்; தேவனுக்குப் பிள்ளைகளாகமல், எப்படி தேவ ராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமுடியும்.

எந்த மதத்தையும் தேவன் ஏற்படுத்தவில்லை. எல்லாம் மனுஷ கற்பனைகளே.

இயேசுவே நித்திய ஜீவனின் வழி; பரிசுத்த ஆவியானவரே நித்திய ஜீவன்.

ஆமென் அல்லேலுயா

இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்

பெங்களூர், இந்தியா